மூழ்கப்படுவதோடு மட்டுமல்ல, ஜனங்கள் அதனால் அவதிப்படுவது மட்டுமல்ல, நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலமும் பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலே, அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் ஆய்வில் இருப்பதாகச் சொன்னாலும், உடனடியாக மீண்டும் ஒரு வெள்ளம் வருவதற்கு முன்பாகத் துரித நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

என். என். கண்டிகை குடியிருப்பு.

* வினா எண். 233— திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாலங்காடு ஒன்றியத்தைச் சேர்ந்த என். என். கண்டிகையில் காலனி வெள்ளத்தால் பாதிக்காமல் இருக்க அங்குள்ள ஆற்றங்கரைக்கு துரிக்கல் கட்டும் யோசனை இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பாலாறு—பொருந்தலாறு துணைக்கால்வாய்

* வினா எண். 234— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனித் தாலூகாவிலுள்ள பாலாறு—பொருந்தலாறு அணையிலிருந்து வெட்டப்படும் வாய்க்கால் வேலை சமீப காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1979 மார்ச் 5]

[முற்பகல் 9–50]

திரு. என். பழனிவேல் : பழநி வட்டத்தில் பாலாறு–பொருந்தலாறு அணை கட்டப்பட்டு வேலை முடிந்து திறப்பு விழாவும் முடிந்திருக்கிறது. மெயின் வாய்க்கால் என்று சொல்லக்கூடிய வாய்க்காலின் வேலை முடிந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பகுதி விவசாயிகள் இரண்டு திசைகளைக் காட்டி அவரவர் வசதிக்கேற்றவாறு வாய்க்காலைத் திருப்பி விடவேண்டுமென்று கோரிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அந்த வேலை தடைப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கிருஷ்ணாபுரம், கரடிக்கூட்டம், தெய்வநாயகன்பட்டி, தாழையூர், கோரிக் கடவு ஆகிய ஊர்களிலுள்ள மக்கள் ஏற்கனவே புதிய பாசன வசதியில் 4,500 ஏக்கருக்கு பாலாறு—பொருந்தலாறு திட்டத்தில் அவர்களுடைய கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கைகளை முன் வைத்தார்கள். அதன் காரணமாக 9,600 ஏக்கர் நிலத்திற்கு ஒரு போக புஞ்சை நிலத்திற்கு என்ன முடிவு எடுப்பது என்பதற்காகப் புது ஆய்வு மேற்கொண்ட நேரத்தில் தங்களுடைய கிராமங்கள் சேரவில்லை என்ற காரணத்தால் அந்தப் பணிகளை எல்லாம் அவர்கள் தடை செய்தார்கள். அதற்குப் பின்னர் உயர்நீதி மன்றத்தில் ஸ்டே வாங்க மனு போட்டார்கள். ஆனால் ஸ்டே கொடுக்கப் படவில்லை. அதற்குப் பின்னால் திண்டுக்கல் சப்கோர்ட்டில் ஸ்டே போட்டு இதன்மூலம் ஒரு கமிஷன் நியமித்திருக்கிறார்கள். அதுவும் ஒரு எஞ்சினியராகப் பார்த்து கமிஷனாகப் போட்டு அவரையே ஆய்வு செய்யச் சொன்னார்கள் அவரும் ஆய்வு செய்த பின்னர் அது சரிப்படாது என்று ரிப்போர்ட் கொடுத்த பிறகு மீண்டும் அந்த மக்கள் அந்த வேலைகளைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டார்கள். இப்போது போலீஸ் பந்தோபஸ்துடன் அந்த வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. சி. ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீண்ட உரையாக தொடர் கூட்டம் போல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கேள்வி நேரத்தின்போது அவ்வாறு பதில் சொல்வது கேள்வி நேரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களும் கேள்விகளைக் கேட்கும்போது சுருக்கமாகக் கேட்கவேண்டும், அமைச்சர்களும் பதில் சொல்லும்போது சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கேட்கிற கேள்வியைப் பொறுத்துத்தான் நாங்கள் பதில்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மதுராந்தகம் ஆறுமுகம் போன்றவர்கள் ஆற்றுகின்ற உரை எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் கேள்வி நேரத்தின்போது சுருக்கமாகப் பதில் கூறவேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ எட்மண்ட் : துணைக் கேள்விகள் கேட்கிறவர்கள் ஒரு நேரத்தில் ஒரு கேள்விதான் போட வேண்டுமென்று தாங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட துணைக் கேள்விகளை இரண்டு பக்கங்களிலுமுள்ள உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அப்படிக் கேட்கிறபோது அமைச்சர்கள் அவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கிட்டப்பா போன்றவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று துணைக் கேள்விகளைக் கேட்பது வழக்கமாக இருக்கிறது. ஓர் உறுப்பினர் ஒரு சமயத்தில் ஒரு துணைக்கேள்விதான் கேட்க வேண்டும். அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் கூற வேண்டும். துணைக் கேள்விகளும் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும். அதற்கு அப்பால் போய் துணைக் கேள்விகள் கேட்பதால் நேரம் வீணாகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : பாலாறு—பொருந்தலாறு அணை கட்டப்பட்டு அதிலிருந்து வெட்டப்படுகிற வாய்க்கால் பகுதியிலுள்ள மேட்டு நிலங்களில் கிணறுகளை வெட்டி ஆயில் எஞ்சின் மோட்டார் வைத்து தண்ணீரைத் திருடுவதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? அரசு அதன்மீது நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதற்கு என்னுடைய சுருக்கமான பதில்—புகார் வரவில்லை.

செஞ்சி மருத்துவ மனை

*வினா எண். 235.—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை பிரிவு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?